மயில் தான் ஆடியது – பொதுப்பெயர்
குழல் கேட்டு மகிழ்ந்தான் - கருவியாகுபெயர்
மல்லிகை – பொருட்பெயர்
ஆடுதல் - தொழிற்பெயர்
உலகம் புகழும் - இடப்பெயர்
இனிப்பு – பண்புப்பெயர்
வெற்பு - இடப்பெயர்
ஓதுதல் - தொழிற்பெயர்
மரம் - பொருட்பெயர்
சித்திரை – காலப்பெயர்
செம்மலர் பூத்தது – பண்புத்தொகை
வற்றல் உண்டான் - தொழிற்பெயர்
தேர்வு – தொழிற்பெயர்
கருமை – பண்புப்பெயர்
காலை – காலப்பெயர்
நல்லவன் - குணப்பெயர்
கோவை - இடப்பெயர்
கிழமை – காலப்பெயர்
பணிவு – தொழிற்பெயர்
தோள் - சினைப்பெயர்
மாலை வேளை – காலப்பெயர்
நீலம் - பண்புப்பெயர்
வணக்கம் - பண்புப்பெயர்
இனிமை – பண்புப்பெயர்
உலகம் - இடப்பெயர்
நல்லன் - குணப்பெயர்
செய்தல் - தொழிற்பெயர்
வெண்மை – பண்புப்பெயர்
தலை – சினைப்பெயர்
புளித்த மோர் – பண்புப்பெயர்
காளை வந்தான் - உவமையாகுபெயர்
பழி நாணுவானை – வினையாலணையும் பெயர்
கழல் பணிந்தான் - தானியாகு பெயர்
பசு பால் தரும் - படர்க்கை பலவின் பால் பெயர்
மயில்கள் எல்லாம் ஆடின - இடப்பொதுப்பெயர்



## 15. இலக்கணக் குறிப்பறிதல்

**உரிச்சொல்**

சால, உறு, தவ, நனி, கூர், கழி, மடி, மிகு, வய, தட, கடி, மா, முதலான உரிச்சொற்கள், பெயர்ச்சொற்களையோ, வினைச் சொற்களையோ தொடர்ந்து வந்தால் அது உரிச்சொல் தொடர் எனப்படும்.

**சான்று :** உறுபசி, கடிநகர்

**இடுகுறிப்பெயர்**

நம் முன்னோர்கள் எந்தக் காரணமும் கருதாமல் ஒரு பொருளுக்குக் குறியீடாக இட்ட பெயரே இடுகுறிப்பெயர் ஆகும். இன்னும் குறிப்பாகச் சொன்னால் பெயருக்குரியக் காரணத்தை அறியமுடியாத எல்லாப் பெயர்களும் இடுகுறிப்பெயர்களாகும். இடுகுறிப்பெயர் இடுகுறிப்பொதுபெயர், இடுகுறிக்காரணப்பெயர் என இருவகைப்படும்.

**சான்று :** மண், நாய், கோழி, மலை, காடு, மாடு

**இடுகுறிப்பொதுப்பெயர்**

அனைத்திற்கும் பொதுவாக வரும் இடுகுறிப்பெயர்களை இடுகுறிப்பொதுப்பெயர் எனக் கூறுவர்

**சான்று :** மலை – மலை என்பது அனைத்து மலைகளுக்கும் பொதுப்பெயர்

காடு – காடு என்பது அனைத்துவகைக் காடுகளுக்கும் பொதுப்பெயர்

மாடு – மாடு என்பது பல்வகை மாடுகளுக்கும் பொதுப்பெயர்

**இடுகுறிச் சிறப்புப் பெயர்**

ஒரு பொருளுக்கே சிறப்பாய் வரும் இடுகுறிப் பெயர் இடுகுறிச் சிறப்புப் பெயர் எனப்படும்.

**சான்று :** தென்னை மரம் - தென்னை என்னும் சொல் ஒரு காரணமும் இன்றி, இடுகுறிப்பெயராய் நின்று, ஒரு பொருளுக்கே சிறப்பாய் வருவதனால் இது இடுகுறிச் சிறப்புப் பெயராயிற்று.

**காரணப்பெயர்**

காரணம் கருதி இடப்பட்ட பெயர்கள் காரணப்பெயர்கள் எனப்படும். காரணப்பெயர் காரணப்பொதுப்பெயர், காரணச் சிறப்புப் பெயர் என இருவகைப்படும்

**காரணப்பொதுப்பெயர்**

**சான்று :** பறவை – பறப்பதனால் என்ற காரணத்தினால் இது பறவை என்ற காரணப்பெயரைப் பெற்றது.

**காரணச் சிறப்புப்பெயர்**

**சான்று :** வளையல் - சில பொருட்கள் வளையல் போல வளைந்து வட்டமாக இருந்தாலும் வளையல் என அழைக்கப்படுவது இல்லை. ஆயினும் இச்சொல் கையில் அணியும் வளையலை மட்டும் குறிப்பதால் காரணச்சிறப்புப் பெயர் ஆயிற்று.

**வினையாலணையும் பெயர்**

வினைமுற்று வினையைக் குறிக்காமல் வினை செய்தவரைக் குறித்தால் அது வினையாலணையும் பெயர் எனப்படும். இது இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற முக்காலத்தில் ஏதாவது ஒன்றைக் காட்டி நிற்கும். வேற்றுமை உருபுகளை ஏற்று வரும். இன்னும் எளிமையாகச் சொன்னால் அவன், அவள், அவர், அனன் என்று முடிந்தால் அது வினையாலணையும் பெயர் என அறிந்துகொள்ளலாம்.

**சான்று:** காட்சியவர், படித்தவன், கண்டவர், சென்றனன்.

**வேற்றுமைத்தொகை**

பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவது வேற்றுமை எனப்படும். பெயர்ச்சொல்லின் இறுதியில் அமைந்து பொருள் வேறுபாட்டைச் செய்யும் உருபுகளை வேற்றுமை உருபுகள் என்பர். இவ்வாறாக இரண்டு சொற்களுக்கிடையேயுள்ள வேற்றுமை உருபுகள் மறைந்து வரசொற்கள் நிற்பது வேற்றுமைத் தொகை எனப்படும். வேற்றுமை உருபுகள் எட்டு வகைப்படும். அவை,

முதல் வேற்றுமை – உருபு இல்லை
இரண்டாம் வேற்றுமை – ஐ
மூன்றாம் வேற்றுமை – ஆல், ஆன், ஒடு, ஓடு
நான்காம் வேற்றுமை – கு
ஐந்தாம் வேற்றுமை - இன்
ஆறாம் வேற்றுமை – அது
ஏழாம் வேற்றுமை – கண்
எட்டாம் வேற்றுமை – உருபு இல்லை

**முதல் வேற்றுமை (உருபு இல்லை)**

பொருளின் இயல்பான பெயரே முதல் வேற்றுமைத் தொகை எனப்படும். இதற்கு உருபு இல்லை. இதற்கு எழுவாய் வேற்றுமை, பெயர் வேற்றுமை என்ற வேறு பெயர்களும் உண்டு.

**சான்று :** கந்தன் வந்தான், இராமன் வந்தான்



**இரண்டாம் வேற்றுமைத் தொகை (ஐ)**

ஐ என்ற வேற்றுமை உருபு மறைந்து வந்தால் அது இரண்டாம் வேற்றுமைத் தொகை எனப்படும்.

**சான்று :** பால் குடித்தான், மொழி கற்றான், சிலை செய்தான், காளை போன்றவன், இல்லறம் துறந்தான், கோயில் கட்டினான்.

**மூன்றாம் வேற்றுமைத் தொகை**

ஆல், ஆன், ஒடு, ஓடு என்ற வேற்றுமை உருபுகள் இரு சொற்களுக்கிடையே மறைந்துவந்தால் அது மூன்றாம் வேற்றுமைத் தொகை எனப்படும்.

**சான்று** – பேனா எழுதினான் (பேனாவால் எழுதினான்)
தலை வணங்கினான் (தலையால் வணங்கினான்)
கடிதம் பணம் வந்தது (கடிதத்தோடு பணம் வந்தது)
தாய் தந்தை வந்தார் (தாயோடு தந்தை வந்தார்)

**நான்காம் வேற்றுமைத் தொகை (கு)**

கு என்ற வேற்றுமை உருபு இரு சொற்களுக்கிடையே மறைந்து வந்தால் அது நான்காம் வேற்றுமைத் தொகை எனப்படும்.

**சான்று :** நோய் மருந்து (நோய்க்கு மருந்து)
மயில் போர்வை கொடுத்தான் (மயிலுக்குப் போர்வை கொடுத்தான்)

**ஐந்தாம் வேற்றுமைத் தொகை (இல், இன்)**

இல், இன் என்ற வேற்றுமை உருபுகள் இரு சொற்களுக்கிடையே மறைந்து வந்தால் அது ஐந்தாம் வேற்றுமைத் தொகை எனப்படும்.

**சான்று :** பழனி கிழக்கு மதுரை (பழனியின் கிழக்கு மதுரை)
கொடை சிறந்தவன் குமரன் (கொடையில் சிறந்தவன் குமரன்)

**ஆறாம் வேற்றுமைத் தொகை (அது, ஆது, அ)**

அது, ஆது, அ என்ற வேற்றுமை உருபுகள் இரு சொற்களுக்கிடையே மறைந்து வந்தால் அது ஆறாம் வேற்றுமைத் தொகை எனப்படும்.

**சான்று :** கபிலர் பாட்டு – கபிலரது பாட்டு
கண் பார்வை – கண்ணினது பார்வை
வினைப்பயன் - வினையினது பயன்

**ஏழாம் வேற்றுமைத் தொகை (கண், கால், மேல், கீழே, இடம், இல், இடை, வாய், வாயின் முனை, உழை, வழி, அகம், உள்)**

கண், கால், மேல், கீழே, இடம், இல், இடை, வாய், வாயின் முனை, உழை, வழி, அகம், உள் என்ற வேற்றுமை உருபுகள் இரு சொற்களுக்கிடையே மறைந்து வந்தால் அது ஏழாம் வேற்றுமைத் தொகை எனப்படும்.

**சான்று :** மணியில் ஒலி - இல்
கூரையின்மேல் சேவல் உள்ளது – மேல்
பெட்டிக்குள் பணம் இருக்கிறது – உள்
இடம் அவனுழை – உழை
இடை நிழல்வழி – வழி
வாயு காட்டகம் - அகம்
மணியின்கண் ஒலி – கண்
கற்றார்முன் - முன்

**எட்டாம் வேற்றுமை**

இவ்வேற்றுமைக்கு உருபு இல்லை. படர்க்கைப் பெயரை முன்னிலைப் பெயராக்கி அழைக்க இவ்வேற்றுமை பயன்படுகிறது. பெயர்ச்சொல்லின் ஈறுகெடுதல், மிகுதல், திரிதல், இயல்பாதல், ஈற்று எழுத்துக்கு முந்திய எழுத்து திரிதல் முதலிய வேறுபாடுகளை அடையும்.

**சான்று :** ராமன் - ராமனே, கந்தன் - கந்தனே

**வினைத்தொகை**

வினைத்தொகை ஒரு வினைச்சொல்லும் ஒரு பெயர்ச்சொல்லும் இணைந்த கூட்டுச் சொல் ஆகும். முதல் சொல் வினைச்சொல்லாக இருக்கும். பின்வரும் சொல் பெயர்ச்சொல்லாக இருக்கும். முன்வரும் வினைச்சொல் இறந்த காலம், நிகழ்காலம், எதிர்கலம் என்ற மூன்று காலத்தையும் குறிப்பால் உணர்த்தும் சொல்லாக அமையும்.

**சான்று :** ஊறுகாய், நிகழ்த்துக்கலை, வீசுதென்றல், கடிநாய், படர்கொடி, சுடுசோறு, குடிநீர், ஏவுகணை, அலைபேசி, நகருயிர், ஓடுதளம், ஆடுகளம்

**பண்புத்தொகை**

சொல்லின் முதல் பகுதி குணம், உருவம், நிறம், எண், சுவை போன்ற பண்பினைக் குறிக்கும். சொல்லின் இரண்டாவது பகுதி பெயர்ச் சொல்லைக் குறிக்கும். பண்பு பெயருக்கும் பெயர்ச்சொல்லுக்கும் இடையே பண்பு விகுதி மையும், பண்பு உருவாகிய ஆகிய என்ற சொல்லும் மறைந்து வருவது பண்புத் தொகை எனப்படும்.

**சான்று :** வெண்கரடி – வெண்மை கரடி
வட்டக்கல் - வட்டமான கல்
புளிச்சோறு – புளிக்கும் சோறு
நல்லன் - நன்மை அன்
சிறுபொருள் - சிறுமை பொருள்
கரியன் - கருமை அன்
சிறியிலை – சிறுமை இலை
பாசிலை – பசுமை இலை
நட்டாறு – நடுமை ஆறு



**இருபெயரொட்டுப் பண்புத்தொகை**

சிறப்புப் பெயர் முன்னும், பெதுப்பெயர் பின்னும் நின்று, இடையில் ஆகிய என்னும் பண்பு உருபு மறைந்து வருவது இரு பெயரொட்டுப் பண்புத்தொகை எனப்படும்.

**சான்று** : பூசலன்பன், அவைக்களம், மதவெறி, இமயப்பொருப்பு, கடல்நீர், இனப்பற்று, அவிஉணவு, கொடை வீரம், அந்திமாலை

**உவமைத்தொகை**

இரண்டு சொல்லாக இருக்க வேண்டும். முதலில் உள்ள சொல் உவமையைக் குறிப்பதாக இருக்கும். இரண்டாவது சொல் பொருளைக் குறிக்கும். முதல் சொல்லுக்குப் பின் போல, போன்ற, புரைய, ஒப்ப, உறழ, அன்ன, இன்ன, மான, கடுப்ப, இயைய, ஏய்ப்ப, நேர, நிகர என்ற உவம உருபுகளுள் ஒன்று மறைந்து வருவது உவமைத்தொகை எனப்படும்.

**சான்று :** மதிக்குடை, வரைத்தோள், கஞ்சக்கரத்தான், கடல்சேனை, மலரடி, வாள்கண், மலர்ப்பதம், வரைப்பயன், வாள்மீசை

**உம்மைத்தொகை**

சொற்கள் ஒன்றோடு ஒன்று தொடரும்பொழுது இடையிலும் ஈற்றிலும் உம் என்னும் இடைச்சொல் தொக்கு வருவது உம்மைத்தொகை எனப்படும்.

**சான்று :** ஒன்றேகால், கழஞ்சு கர்ணம், மரக்கால்படி, அடிஅங்குலம், புலி வில் கெண்டை

**எண்ணும்மை**

சொற்கள் ஒன்றோடு ஒன்று தொடரும் பொழுது இடையிலும் ஈற்றிலும் உம் என்னும் இடைச்சொல் வெளிப்படையாக வருவது எண்ணும்மை எனப்படும்.

**சான்று :** கருமுகிலும் வெண்மதியும், ஆக்கமும் கேடும், வாவியும் பூவையும், நெய்யும் தேனும், யாமத்தும் பகலும், தேவியும் ஆயமும்

**அன்மொழித்தொகை**

வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை ஆகிய ஐந்து தொகைநிலைத் தொடர்களுக்குப் புறத்தே வேறு சொற்கள் மறைந்து வருவது அன்மொழித்தொகையாகும். அன்மொழித்தொகையில் மட்டும் ஒன்றுக்கும் மேற்பட்ட பல சொற்கள் மறைந்து வருகின்றன.

**சான்று :** தேமொழி வந்தாள் - தேன் போன்ற மொழி என விரியும். எனவே, இது உவமைத்தொகையாகும். ஆயினும், தேமொழி என்பது வந்தாள் என்னும் குறிப்பால் தேன் போன்ற மொழியைப் பேசும் பெண் எனப் பொருள் தருகின்றது. இவ்வாறு, தேன் போன்ற மொழி என்னும் உவமைத்தொகைக்கு அப்பால் தேமொழி என்பது ஒரு பெண் என்னும் பொருள்பட்டமையால் உவமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை ஆயிற்று.

**ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்**

ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் என்பது எதிர்மறையான பொருளில் வரும் வினைச்சொல், அதன் இறுதி எழுத்து இல்லாமல் வந்து அடுத்து வரும் பெயர்ச்சொல்லுக்கு விளக்கம் தருவதாக அமையும். இதனை இன்னும் குறிப்பாகச் சொன்னால் முதலில் உள்ள சொல்லின் இறுதிப் பகுதி ஆ என்ற ஓசையில் முடிந்தால் அதனை ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் என உடனே உணரலாம்.

**சான்று :** ஓடா வண்டி, மாறா அன்பு, பேசா மடந்தை, காணாக் காட்சி, தீண்டா வைமுள், புலரா ஈர்மணல்

**முற்றெச்சம்**

ஒரு வினைமுற்று, வேறொரு வினைமுற்றைக் கொண்டு முடியும் பொழுது எச்சப்பொருள் தரும். இது முற்றெச்சம் எனப்படும்.

**சான்று :** கற்றனன் மகிழ்ந்தான், பாடினாள் ஆடினாள், வந்தனள் சென்றனள், உற்றிலன் நின்றான்.

**மரூஉ**

ஒரு சொல் காலப்போக்கில் சில எழுத்துகள் தோன்றியும், திரிந்தும், கெட்டும், இலக்கணம் சிதைந்து, தானே மாறி வருவது மரூஉ எனப்படும்.

**சான்று :** எந்தை – என் + தந்தை என்னும் இரு சொற்கள் இணைந்து தம்முள் சுருங்கி எந்தை என மரூஉ ஆயிற்று. சோழநாடு – சோணாடு, கோவன் புத்தூர் – கோவை, திருச்சிராப்பள்ளி – திருச்சி

**உருவகம்**

உவமையையும் பொருளையும் வேறு வேறாக்கிக் கூறாமல் இரண்டனையும் ஒன்றாக்கி, உவமானத்தின் தன்மையை உவமேயத்தின் மீது ஏற்றி இரண்டும் ஒன்றெனக் கூறுவது உருவகம் எனப்படும்.

**சான்று :** முகமலர் – ஒரு பெண்ணின் முகத்தைப் பார்க்கிறோம். உடனே மலரைப் போன்ற முகம் என மலருடன் அவளது முகத்தை ஒப்பிடுகின்றோம். அதனையே ஒருபடி மேலே சென்று முகமலர் என முகமே மலர் போன்றுதான் இருக்கிறது என்று சொன்னால் அது உருவகம் எனப்படும்.

**போலி**

ஒரு சொல்லில் ஒரு எழுத்துக்குப் பதில், அந்த இடத்தில் வேறொரு எழுத்து வந்து, பொருள் மாறுபடாமல் இருப்பின் போலி எனப்படும். அது சொல்லின் முதல் எழுத்து மாறுபட்டாலும் பொருள் மாறுபடாமல் வந்தால் அது முதற்போலி. ஒரு சொல்லின் இடை எழுத்து மாறுபட்டாலும் பொருள் மாறுபடாது இருந்தால் அது இடைப்போலி. ஒரு சொல்லின் இறுதி எழுத்து மாறுபட்டாலும் பொருள் மாறுபடாது இருந்தால் அது இறுதிப்போலி எனப்படும். இது தவிர ஒரு சொல்லின் உள்ள அனைத்து எழுத்துக்கள் மாறினாலும் பொருள் மாறுபடவில்லையாயின் அது முற்றுப்போலி எனப்படும்.



**சான்று :**

| | | |
|---|---|---|
| **முதற்போலி** | ---- | மஞ்சு – மைஞ்சு, மயில் - மையல் |
| **இடைப்போலி** | ---- | அரசியல்-அரைசியல், இலஞ்சி - இலைஞ்சி |
| **இறுதிப்போலி** | ----- | அகம் - அகன், முகம் - முகன் |
| **முற்றுப்போலி** | ---- | ஐந்து – அஞ்சு |

**செய்யுளிசை அளபெடை**

செய்யுளில் ஓசை குறையும் இடத்தில் அந்த ஓசையை நிறைவு செய்ய மொழியின் முதலிலும், இடையிலும், இறுதியிலும் நின்ற உயிர்நெடில் எழுத்துக்கள் ஏழும், தமக்கு இனமாகிய குறில் எழுத்துக்களைப் பெற்று உரிய மாத்திரையிலிருந்து மிகுந்தொலிக்கும். இதனையே செய்யுளிசை அளபெடை அல்லது இசைநிறை அளபெடை என்று பெயர். இச்செய்யுளிசை அளபெடை ஈரசையில் மட்டுமே வரும் இதை வைத்தே எளிமையாகக் கண்டறியலாம்.

**சான்று :** தூஉம், ஓஒதல், கெடாஅ, விடாஅ

**இன்னிசை அளபெடை**

செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் அந்த ஓசையை இனிய ஓசையாக மாற்றம் செய்ய குறில் நெடிலாக மாற்றம் பெறுவது இன்னிசை அளபெடை எனப்படும். இன்னிசை அளபெடை மூவசைக் கொண்ட சீர்களில் மட்டுமே வரும். இதனை வைத்து எளிமையாகக் கண்டறியலாம்.

**சான்று :** எடுப்பதூஉம், உள்ளதூஉம், உடுப்பதூஉம்.

**சொல்லிசை அளபெடை**

செய்யுளில் ஓசை குறையாத இடத்தும் ஒரு சொல் திரிந்து அளபெடுப்பது சொல்லிசை அளபெடை எனப்படும். சொல்லிசை அளபெடை அனைத்தும் 'இ' என்ற எழுத்தில் முடியும்.

**சான்று :** அளைஇ, கெழீஇய, நிலைஇய, இரீஇ

**ஆகுபெயர்**

ஒன்றன் பெயர் தனக்குரிய பொருளை உணர்த்தாமல் அதனோடு தொடர்புடைய வேறு ஒரு பொருளுக்குத் தொன்று தொட்டு ஆகி வருவது ஆகுபெயர் எனப்படும்.

**சான்று :** உலகம் சிரித்தது, என் பள்ளி வென்றது.

இவற்றில் உலகம், பள்ளி என்னும் இடப்பெயர்கள் இடத்தை உணர்த்தாமல் முறையே உலகில் உள்ள மக்களையும் பள்ளியில் உள்ள மாணவர்களையும் உணர்த்துகின்றன. எனவே இவை ஆகுபெயர் எனப்பட்டன.

ஆகுபெயரை எண்ணிக்கை அடிப்படையில் பலவாகக் கூறலாம். அவற்றை இங்கே காண்போம்:

1) பொருளாகு பெயர்
2) இடவாகு பெயர்
3) காலவாகு பெயர்
4) சினையாகு பெயர்
5) பண்பாகு பெயர்
6) தொழிலாகு பெயர்
7) அளவையாகு பெயர்
8) சொல்லாகு பெயர்
9) தானியாகு பெயர்
10) கருவியாகு பெயர்
11) காரியவாகு பெயர்
12) கருத்தாவாகு பெயர்
13) உவமையாகு பெயர்

**1. பொருளாகு பெயர்**

முதற்பொருளின் பெயர் அதன் சினைப் பொருளுக்கு ஆகி வருவது பொருளாகு பெயர் எனப்படும். இது முதலாகு பெயர் என்றும் வழங்கப்பெறும்.

**சான்று** - முல்லை மணம் வீசியது.

இதில் முல்லை என்பது முல்லைக் கொடியின் பெயர். இங்கே மணம் வீசியது என்னும் குறிப்பால் இது சினைப் பொருளாகிய முல்லைப் பூவுக்கு ஆகி வந்துள்ளது.

**2. இடவாகு பெயர்**

ஓர் இடத்தின் பெயர் அந்த இடத்தில் உள்ள பொருளுக்கு ஆகி வருவது இடவாகு பெயர் எனப்படும்.

**சான்று** - ஊர் சிரித்தது.

இதில் ஊர் என்னும் இடப்பெயர் சிரித்தது என்னும் குறிப்பால் ஊரில் உள்ள மக்களுக்கு ஆகி வந்துள்ளது.

**3. காலவாகு பெயர்**

ஒரு காலத்தின் பெயர் அந்தக் காலத்தோடு தொடர்புடைய பொருளுக்கு ஆகி வருவது காலவாகு பெயர் எனப்படும்.

**சான்று** - கார் அறுவடை ஆயிற்று.

இதில் கார் என்பது காலப்பெயர். இங்கே அறுவடை ஆயிற்று என்னும் குறிப்பால் இது கார்காலத்தில் விளையும் பயிருக்கு ஆகிவந்துள்ளது.

**4. சினையாகு பெயர்**

ஒரு சினைப் பொருளின் பெயர் அதன் முதற்பொருளுக்கு ஆகி வருவது சினையாகு பெயர் எனப்படும்.



**சான்று** - தலைக்குப் பத்து ரூபாய் கொடு.

இதில் தலை என்னும் சினைப் பொருளின் பெயர், பத்து ரூபாய் கொடு என்னும் குறிப்பால் அந்தத் தலையை உடைய மனிதனுக்கு ஆகி வந்துள்ளது.

**5. பண்பாகு பெயர்**

ஒரு பண்பின் பெயர் அப்பண்புடைய பொருளுக்கு ஆகி வருவது பண்பாகு பெயர் எனப்படும். இது குணவாகு பெயர் என்றும் வழங்கப்பெறும்.

**சான்று** - இனிப்பு உண்டான்.

இதில் இனிப்பு என்னும் சுவைப் பண்பின் பெயர் அச்சுவை கொண்ட பொருளுக்கு ஆகி வந்துள்ளது.

**6. தொழிலாகு பெயர்**

ஒரு தொழிலின் பெயர் அத்தொழிலால் அமைந்த பொருளுக்கு ஆகி வருவது தொழிலாகு பெயர் எனப்படும்.

**சான்று** - சுண்டல் உண்டான்.

இதில் சுண்டல் என்னும் தொழிற்பெயர் அத்தொழிலால் அமைந்த பொருளுக்கு ஆகி வந்துள்ளது.

**7. அளவை ஆகு பெயர்கள்**

எண்ணல் எடுத்தல், முகத்தல், நீட்டல் முதலிய அளவைப் பெயர்கள் ஆகுபெயர்களாக வரும்.

**எண்ணல் அளவையாகு பெயர்**

ஓர் எண்ணல் அளவையின் பெயர் அந்த எண்ணிக்கையில் உள்ள பொருளுக்கு ஆகி வருவது எண்ணல் அளவையாகு பெயர் எனப்படும்.

**சான்று** - ஒன்று பெற்றால் ஒளி மயம்.

இதில் ஒன்று என்னும் எண்ணல் அளவைப் பெயர் அந்த எண்ணுள்ள பொருளுக்கு (குழந்தைக்கு) ஆகி வந்திருப்பதால் எண்ணல் அளவையாகு பெயர் எனப்பட்டது.

**எடுத்தல் அளவையாகு பெயர்**

ஓர் எடுத்தல் அளவையின் பெயர் அந்த அளவுள்ள பொருளுக்கு ஆகி வருவது எடுத்தல் அளவையாகு பெயர் எனப்படும்.

**சான்று** - மூன்று கிலோ வாங்கி வா.

இதில் கிலோ என்னும் எடுத்தல் அளவைப் பெயர் அந்த அளவுள்ள பொருளுக்கு ஆகி வந்துள்ளது.

**முகத்தல் அளவையாகு பெயர்**

ஒரு முகத்தல் அளவையின் பெயர் அந்த அளவுள்ள பொருளுக்கு ஆகி வருவது முகத்தல் அளவையாகு பெயர் எனப்படும்.

**சான்று** - ஐந்து லிட்டர் வாங்கி வா.

இதில் லிட்டர் என்னும் முகத்தல் அளவையின் பெயர் அந்த அளவுள்ள பொருளுக்கு ஆகி வந்துள்ளது.

**நீட்டல் அளவையாகு பெயர்**

ஒரு நீட்டல் அளவையின் பெயர் அந்த அளவுள்ள பொருளுக்கு ஆகி வருவது நீட்டல் அளவையாகு பெயர் எனப்படும்.

**சான்று** - இரண்டு மீட்டர் கொடுங்கள்.

இதில் மீட்டர் என்னும் அளவையின் பெயர் அந்த அளவுள்ள பொருளுக்கு ஆகி வந்துள்ளது.

**8. சொல்லாகு பெயர்**

சொல்லைக் குறிக்கும் பெயர் சொல்லுடைய பொருளுக்கு ஆகி வருவது சொல்லாகு பெயர் எனப்படும்.

**சான்று** - இந்த உரை எனக்கு மனப்பாடம்.

இதில் உரை என்னும் சொல், அச்சொல்லின் பொருள் அமைந்த நூலுக்கு ஆகி வந்துள்ளது.

**9. தானியாகு பெயர்**

ஓர் இடத்தில் உள்ள பொருளின் பெயர் (தானி) அது சார்ந்திருக்கும் இடத்திற்கு (தானத்திற்கு) ஆகி வருவது தானியாகு பெயர் எனப்படும்.

**சான்று** - அடுப்பிலிருந்து பாலை இறக்கு.

இதில் பால் என்பது அது சார்ந்திருக்கும் பாத்திரத்தைக் குறிக்கிறது. பாலை இறக்கு என்றால் பால் இருக்கும் பாத்திரத்தை இறக்கு என்றே பொருள் கொள்ளப்படுகிறது.

**10. கருவியாகு பெயர்**

ஒரு கருவியின் பெயர் அக்கருவியால் ஆகும் பொருளுக்கு ஆகி வருவது கருவியாகு பெயர் எனப்படும்.

**சான்று** - நான் குறள் படித்தேன்.

இதில் குறள் என்பது குறள் வெண்பாவைக் குறிக்கும் சொல். ஆனால் இங்கே குறள் வெண்பாவால் ஆக்கப்பட்ட பாக்களைக் குறிக்கிறது.

**11. காரியவாகு பெயர்**

ஒரு காரியத்தின் பெயர் அதன் காரணத்திற்கு (கருவிக்கு) ஆகி வந்தால் காரியவாகு பெயர் எனப்படும்.

**சான்று** - நான் அலங்காரம் கற்றேன்.

இதில் அலங்காரம் என்னும் சொல் அலங்காரத்தைக் (அணியை) கற்பிக்கும் நூலுக்கு ஆகி வந்துள்ளது.

**12. கருத்தாவாகு பெயர்**

ஒரு கருத்தாவின் பெயர் அக்கருத்தாவால் செய்யப்பட்ட பொருளுக்கு ஆகி வருவது கருத்தாவாகு பெயர் எனப்படும்.

**சான்று** - இவருக்கு வள்ளுவர் மனப்பாடம்.

இதில் வள்ளுவர் என்னும் சொல் வள்ளுவரால் இயற்றப்பட்ட திருக்குறள் நூலுக்கு ஆகி வந்துள்ளது.



**13. உவமையாகு பெயர்**

ஓர் உவமையின் பெயர் அதனால் உணர்த்தப் பெறும் உவமேயத்திற்கு ஆகி வருவது உவமையாகு பெயர் எனப்படும்.

**சான்று** - காளை வந்தான்.

இதில் காளை என்னும் சொல், காளை போன்ற வீரனுக்கு ஆகி வந்துள்ளது.

| | | |
|---|---|---|
| காளை | - | உவமை |
| வீரன் | - | பொருள் |

**இரட்டைக் கிளவி**

ஒரு வாக்கியத்தில் ஒரு சொல் தனித்து வருகையில் பொருள் தராமல், இரட்டையாய் அடுக்கி வரும் பொழுது, பொருள் தரும் சொற்றொடர் இரட்டைக்கிளவி எனப்படும்.

**சான்று :** தடதட, படபட, கொடகொட, கடுகடு, சலசல, பளபள, வழவழ

**அடுக்குத்தொடர்**

ஒரு சொல் தொடர்ந்து இரண்டுமுறை வரும். அவற்றைத் தனித்தனியே பிரித்தால் பொருளைத்தரும். அதுவே அடுக்குத்தொடர் எனப்படும்.

**சான்று :** பாம்பு பாம்பு, வருக வருக, எழுத எழுத, சிறிய சிறிய

**வியங்கோள் வினைமுற்று**

வியம் என்பதற்கு ஏவல் அல்லது கட்டளை என்று பொருள். வியத்தை (அல்லது) ஏவுதலைக் கொள்வது ஆகையால் இச்சொல் வியங்கோள் எனப்பட்டது. வியங்கோள் வினை பெரும்பாலும் நான்கு பொருள்களில் பயன்படுத்தப்பெறுகிறது. அவை வாழ்த்தல், வைதல், வேண்டல், விதித்தல் ஆகியவையாம். இச்சொல் இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கும் உரியதாகப் பயன்படுத்தப்பெறுகிறது.

| | | |
|---|---|---|
| வெல்க, வாழ்க | - | வாழ்த்தல் பொருள் |
| வீழ்க, ஒழிக | - | வைதல் பொருள் |
| வருக, உண்க | - | விதித்தல் பொருள் |
| அருள்க, கருணைபுரிக | - | வேண்டல் பொருள் |

சுருக்கமாகக் கூறினால் க, இய, இயர் என்ற விகுதிகளைப் பெற்றுவந்தால் அது வியங்கோள் வினைமுற்று எனப்படும்.

**சான்று :** வருக, வாழிய, வாழியர்

**இலக்கணக் குறிப்புச் சொற்கள் சான்றுக்காக சில**

| | | |
|---|---|---|
| அணைந்த, வாகீசர் | - | பெயரெச்சம் |
| அறிந்து, அடைந்து | - | வினையெச்சம் |

| | | |
|---|---|---|
| வந்தவர் | - | வினையாலணையும் பெயர் |
| தீண்டிற்று | - | ஒன்றன்பால் வினைமுற்று |
| நோக்கி | - | வினையெச்சம் |
| பெருமையறிந்து | - | இரண்டாம் வேற்றுமைத் தொகை |
| தேசம் | - | இடவாகு பெயர் |
| அங்கணர் | - | அன்மொழித்தொகை |
| கேளா | - | செய்யா என்னும் வாய்ப்பாடு வினையெச்சம் |
| அறனறிந்து | - | இரண்டாம் வேற்றுமைத்தொகை |
| உற்றநோய் | - | பெயரெச்சம் |
| துணையார் | - | வினையாலணையும் பெயர் |
| அறனீனும் | - | இரண்டாம் வேற்றுமைத்தொகை |
| தன்ஒன்னார் | - | ஆறாம் வேற்றுமைத்தொகை |
| குன்றேறி | - | ஏழாம் வேற்றுமைத்தொகை |
| திறனறிந்து | - | இரண்டாம் வேற்றுமைத்தொகை |
| உறாஅமை | - | செய்யுளிசை அளபெடை |
| ஒழுகுதல் | - | தொழிற்பெயர் |
| இல்லை | - | குறிப்பு வினைமுற்று |
| வந்த பொருள் | - | பெயரெச்சம் |
| வேந்தன் பொருள் | - | ஆறாம் வேற்றுமைத்தொகை |
| செய்க | - | வியங்கோள் வினைமுற்று |
| படர்ந்த தெண்டிரை | - | பெயரெச்சம் |
| நெடுநீர் | - | பண்புத்தொகை |
| வெள்ளெயிறு | - | பண்புத்தொகை |
| செவிபுக | - | ஏழாம் வேற்றுமைத்தொகை |
| வால்குழைத்து | - | இரண்டாம் வேற்றுமைத்தொகை |
| சிரமுகம் | - | உம்மைத்தொகை |
| நன்று நன்று | - | அடுக்குத்தொடர் |
| தடக்கரி | - | உரிச்சொற்றொடர் |
| கால் மடித்து | - | இரண்டாம் வேற்றுமைத்தொகை |
| பொதிந்தமெய் | - | பெயரெச்சம் |
| பூதரப்புயம் | - | உவமைத்தொகை |
| நனிமனம் | - | உரிச்சொற்றொடர் |
| மலரடி | - | உவமைத்தொகை |
| ஒழுகுதல் | - | தொழிற்பெயர் |



| | | |
|---|---|---|
| பொழிதருமணி | - | வினையெச்சம் |
| நிதிதருகவிகை | - | வினையெச்சம் |
| கோல்நோக்கி | - | இரண்டாம் வேற்றுமைத்தொகை |
| பழச்சுவை | - | ஆறாம் வேற்றுமைத் தொகை |
| உயிர்த்திரள் | - | ஆறாம் வேற்றுமைத் தொகை |
| தொன்மக்கள் | - | பண்புத்தொகை |
| உரைகாலம் | - | வினைத்தொகை |
| தாள் தலை | - | இரண்டாம் வேற்றுமைத்தொகை |
| பெருகும் இன்பம் | - | என்னும் வாய்ப்பாட்டுப் பெயரெச்சம் |
| அறுகுளம் | - | வினைத்தொகை |
| அகல்வயல் | - | வினைத்தொகை |
| கடாஅ | - | இசைநிறை அளபெடை |
| அவிழாக் கோட்டுகிர் | - | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| நீளிடை | - | வினைத்தொகை |
| சாஅய் | - | இசைநிறைஅளபெடை |
| பிரிந்தோர் | - | வினையாலணையும் பெயர் |
| மருள் | - | உவமவுருபு |
| நாட | - | அண்மைவிளி |
| வாழியர் | - | வியங்கோள் வினைமுற்று |
| அடங்காமை | - | எதிர்மறை தொழிற்பெயர் |
| அடங்கியான் | - | வினையாலணையும் பெயர் |
| உடைத்து | - | குறிப்பு வினைமுற்று |
| அடங்கல் | - | தொழிற்பெயர் |
| பொருட்டு | - | குறிப்பு வினைமுற்று |
| மற்றையான் | - | குறிப்பு வினையாலணையும் பெயர் |
| கடனறிகாட்சி | - | வினைத்தொகை |
| கேடு, கோள் | - | முதனிலை திரிந்த தொழிற்பெயர் |
| அருவினை | - | பண்புத்தொகை |
| அதனினூஉங்கு | - | இன்னிசை அளபெடை |
| பணிதல் | - | தொழிற்பெயர் |
| நன்று | - | பண்புப்பெயர் |
| தந்தபொருள் | - | பெயரெச்சம் |
| வாழ்வான் | - | வினையாலணையும் பெயர் |
| பெருந்தகை | - | பண்புத்தொகை |

| | | |
|---|---|---|
| ஆதல் | - | தொழிற்பெயர் |
| ஒழுகல் | - | தொழிற்பெயர் |
| கருதுபவர் | - | வினையாலணையும் பெயர் |
| சுமக்க | - | வியங்கோள் வினைமுற்று |
| செல்வார் | - | வினையாலணையும் பெயர் |
| சாலமிகுந்து | - | உரிச்சொற்றொடர் |
| ஒடுக்கம் | - | தொழிற்பெயர் |
| ஒக்க | - | வியங்கோள் வினைமுற்று |
| அறியார் | - | எதிர்மறை வினையாலணையும் பெயர் |
| கொம்பர் | - | ஈற்றுப்போலி |
| வாழ்க்கை | - | தொழிற்பெயர் |
| பாவை | - | உவமை ஆகுபெயர் |
| கடிமிடறு | - | உரிச்சொற்றொடர் |
| எரிமலர் | - | உவமத்தொகை |
| விடுகணை | - | வினைத்தொகை |
| கழித்த | - | பெயரெச்சம் |
| தடங்கண் | - | உரிச்சொற்றொடர் |
| கமழ் ஓதி | - | அன்மொழித்தொகை |
| சிலைத் தொழில் | - | ஆறாம் வேற்றுமைத்தொகை |
| பவளச்செவ்வாய் | - | உவமைத்தொகை |
| செவ்வாய் | - | அன்மொழித்தொகை |
| திண்டேர் | - | பண்புத்தொகை |
| அண்ணா | - | உவமஉருபு |
| சுரந்து, முதிர்ந்து | - | வினையெச்சம் |
| காளை | - | உவம ஆகுபெயர் |
| மலைமுழை | - | ஏழாம் வேற்றுமைத்தொகை |
| அறிகிலார் | - | எதிர்மறை வினையாலணையும் பெயர் |
| மென்மலர் | - | பண்புத்தொகை |
| என்ன | - | உவமஉருபு |
| நினைத்தவர் | - | வினையாலணையும் பெயர் |
| வெருவி, கிழித்து | - | வினையெச்சம் |
| மதிமுகம் | - | உவமத்தொகை |
| வல்லுடல் | - | பண்புத்தொகை |
| மதி | - | உவம ஆகுபெயர் |



| | | |
|---|---|---|
| வெவ்விடம் | - | பண்புத்தொகை |
| ஆகுக | - | வியங்கோள் வினைமுற்று |
| கனங்கணம் | - | அடுக்குத்தொடர் |
| பெருங்கடல் | - | பண்புத்தொகை |
| வன்காயம் | - | பண்புத்தொகை |
| மலர்க்கால் | - | உவமைத்தொகை |
| மாசை எற்றி | - | இரண்டாம் வேற்றுமை விரி |
| எரிந்து, நாட்டி | - | வினையெச்சம் |
| களம் கண்டோம் | - | இரண்டாம் வேற்றுமைத்தொகை |
| மெல்லிதழ் | - | பண்புத்தொகை |
| பொழி திருமுகம் | - | வினைத்தொகை |
| கண்மலர் | - | உருவகம் |
| அருந்தவம் | - | பண்புத்தொகை |
| பேய்க்கணங்கள் | - | ஆறாம் வேற்றுமைத்தொகை |
| அருந்தமிழ் | - | பண்புத்தொகை |
| பகர்வார் | - | வினையாலணையும் பெயர் |
| பூக்கின்ற, ஈர்க்கின்ற | - | பெயரெச்சம் |
| புல்லடிமை | - | பண்புத்தொகை |
| பகல்பூக்கள் | - | ஏழாம் வேற்றுமைத்தொகை |
| மனப்பறவை | - | உருவகம் |
| இலா | - | இடைக்குறை |
| கரவேல் | - | எதிர்மறை ஏவல் வினைமுற்று |
| பெருங்குணம் | - | பண்புத்தொகை |
| பரவுதும் | - | தன்மைப் பன்மை வினைமுற்று |
| நீங்கா இன்பம் | - | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| வீற்றிருந்த | - | பெயரெச்சம் |
| வாழ்க்கை | - | தொழிற்பெயர் |
| அசைத்த, இசைத்த | - | பெயரெச்சம் |
| திருந்துமொழி | - | வினைத்தொகை |
| அடிவாழ்த்துவம் | - | இரண்டாம் வேற்றுமைத்தொகை |
| தினந்தினம் | - | அடுக்குத்தொடர் |
| போனவர் | - | வினையாலணையும் பெயர் |
| யாரையும் | - | முற்றும்மை |

| | | |
|---|---|---|
| திரைகவுள் | - | வினைத்தொகை |
| ஆற்றீர் | - | முன்னிலை பன்மை எதிர்மறை வினைமுற்று |
| உயர்சினை | - | வினைத்தொகை |
| பகலுறை | - | ஏழாம் வேற்றுமைத்தொகை |
| கடிமகள் | - | உரிச்சொற்றொடர் |
| வல்விரைந்து | - | ஒருபொருட்பன்மொழி |
| களிற்று மருப்பு | - | ஆறாம் வேற்றுமைத்தொகை |
| நன்மான், நெடுந்தேர் | - | பண்புத்தொகை |
| யாரும் | - | முற்றும்மை |
| குருகும் | - | இழிவு சிறப்பும்மை |
| பொலம்புனை | - | மூன்றாம் வேற்றுமைத்தொகை |
| வேற்காளை | - | வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை |
| செய்யாமல் | - | எதிர்மறை வினையெச்சம் |
| தூக்கின் | - | எதிர்கால பெயரெச்சம் |
| மறவற்க | - | எதிர்மறை வியங்கோள் வினைமுற்று |
| கொன்றார் | - | வினையாலணையும் பெயர் |
| ஒரால், பொறை | - | தொழிற்பெயர் |
| செய்தாரை | - | வினையாலணையும் பெயர் |
| அற்றம் | - | தொழிற்பெயர் |
| கூம்பல் | - | தொழிற்பெயர் |
| அதிர | - | வினையெச்சம் |
| ஏற்றா | - | ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம் |
| எய்தி | - | வினையெச்சம் |
| தூக்கார் | - | முற்றெச்சம் |
| சால்பு | - | பண்புப்பெயர் |
| உள்ள | - | வினையெச்சம் |
| விருந்து | - | பண்பாகு பெயர் |
| ஒருத்தார் | - | வினையாலணையும் பெயர் |
| உண்ணாது | - | எதிர்மறை வினையாலணையும் பெயர் |
| எண்பொருள் | - | பண்புத்தொகை |
| அஞ்சல் | - | தொழிற்பெயர் |
| ஒல்காமை | - | தொழிற்பெயர் |
| எளிய | - | குறிப்பு வினைமுற்று |
| ஈர்வளை | - | வினைத்தொகை |



| | | |
|---|---|---|
| காற்சிலம்பு | - | ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை |
| தண்குடை | - | பண்புத்தொகை |
| மாமதுரை | - | உரிச்சொற்றொடர் |
| வளைக்கை | - | இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை |
| மாமணி | - | உரிச்சொற்றொடர் |
| கழல் | - | தானியாகு பெயர் |
| தெண்டிரை | - | பண்புத்தொகை |
| துறத்தி | - | ஏவல் வினைமுற்று |
| பெருந்தவம் | - | பண்புத்தொகை |
| களிநடம் | - | வினைத்தொகை |
| கோறல் | - | தொழிற்பெயர் |
| பொன்னடி | - | உவமத்தொகை |
| கைத்தலம் | - | இருபெயரொட்டுப் பண்புத்தொகை |
| கருமுகில் | - | பண்புத்தொகை |
| கூடினர் | - | வினையாலணையும் பெயர் |
| தொடர்ந்தனன் நகைப்பான் | - | முற்றெச்சம் |
| அறிய ஆண்மை | - | குறிப்புப் பெயரெச்சம் |
| காண்கிலர் | - | எதிர்மறை வினைமுற்று |
| அஞ்சினர் | - | வினையாலணையும் பெயர் |
| இருந்த பாலன் | - | பெயரெச்சம் |
| நாமவேல் | - | உரிச்சொற்றொடர் |
| காத்தார் | - | வினையாலணையும் பெயர் |
| ஈன்ற தந்தை | - | பெயரெச்சம் |
| வாயிலும் மாளிகையும் | - | எண்ணும்மை |
| ஆடரங்கு | - | வினைத்தொகை |
| காணீர் | - | ஏவல் வினைமுற்று |
| ஓங்கியுயர் | - | ஒருபொருட்பன்மொழி |
| செய்குன்று | - | வினைத்தொகை |
| செற்ற சிலை | - | பெயரெச்சம் |
| முத்து முரசம் | - | பண்புத்தொகை |
| சிற்றன்னை | - | பண்புத்தொகை |
| மால் கழல் | - | ஆறாம் வேற்றுமைத்தொகை |

| | | |
|---|---|---|
| அந்தி காளை | - | உம்மைத்தொகை |
| மதிவிளக்கு | - | உருவகம் |
| இருக்கு ஆரணம் | - | இருபெயரொட்டுப் பண்புத்தொகை |
| கயிலாய வெற்பு | - | இருபெயரொட்டுப் பண்புத்தொகை |
| முச்சங்கம் | - | பண்புத்தொகை |
| மதிப்பிஞ்சு | - | ஆறாம் வேற்றுமைத்தொகை |
| வெண்தயிர் | - | பண்புத்தொகை |
| நாழிகை வாரம் | - | உம்மைத்தொகை |
| செந்நெல் | - | பண்புத்தொகை |
| படர்முகில் | - | வினைத்தொகை |
| தங்கத்தீவு | - | உருவகம் |
| சுடரொளி | - | வினைத்தொகை |
| உயர்எண்ணம் | - | வினைத்தொகை |
| தருதல், வைத்தல் | - | தொழிற்பெயர் |
| நீதிநூல் | - | இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை |
| தீராத | - | எதிர்மறைப் பெயரெச்சம் |
| கன்றுகுரல் | - | ஆறாம் வேற்றுமைத் தொகை |
| வெறுங்கை | - | பண்புத்தொகை |
| பாறையும் | - | உயர்வு சிறப்பும்மை |
| கங்கையும் சிந்துவும் | - | எண்ணும்மை |
| மாவிலி | - | உரிச்சொற்றொடர் |
| பசிக்கயிறு | - | உருவகம் |
| கண்ணுதல் | - | இலக்கணப் போலி |
| சொற்பதம் | - | ஒருபொருட் பன்மொழி |
| கடும்பகை | - | பண்புத்தொகை |
| கண்ணிபாலன் | - | நான்காம் வேற்றுமைத்தொகை |
| சுவர்க்கபதி | - | இருபெயரொட்டு பண்புத்தொகை |

ஒ



## 16. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுத்தல்

**எரியும் பொழுது வெப்ப ஆற்றலைக் கொடுக்கும் பொருள் எரிபொருள் எனப்படும்**

**வினா :** எரிபொருள் எனப்படுவது எது?

**இண்டேன் வாயு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளிலிருந்து கிடைக்கிறது.**

**வினா :** இண்டேன் வாயு எங்கிருந்து கிடைக்கிறது?

**வெப்பம் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எவ்வித ஊடகத்தின் உதவியுமின்றிப் பரவுவது வெப்பக்கதிர் வீச்சு**

**வினா :** வெப்பக் கதிர் வீச்சு என்றால் என்ன?

**கல்வி இல்லாத பெண்கள் களர் நிலம் போன்றவர்**

**வினா :** கல்வி இல்லாத பெண்கள் எதைப் போன்றவர்?

**பொம்மைக் கடையின் பெயர் கண்மணி**

**வினா :** பொம்மைக்கடையின் பெயர் என்ன?

**நான்கு மாடுகள் உழுகின்றன**

**வினா :** எத்தனை மாடுகள் உழுகின்றன?

**பேகன், ஆண்ட மலைப்பகுதியின் பெயர் ஆவின்குடி**

**வினா :** பேகன் ஆண்ட மலைப்பகுதியின் பெயர் என்ன?

**திருவள்ளுவர் இயற்றிய நூல் திருக்குறள்**

**வினா :** திருவள்ளுவர் இயற்றிய நூல் எது?

**ஒரு திரவத்தை ஆவியாக்கி, அந்த ஆவியைக் குளிரச் செய்து தூய திரவமாகப் பெறுதல் காய்ச்சி வடித்தல் எனப்படும்.**

**வினா :** காய்ச்சி வடித்தல் என்றால் என்ன?

**பனியாரம் நெய்யினால் சுடப்பட்டது**

**வினா :** பனியாரம் எதில் சுடப்பட்டது?

**பழக்கடையில் மா, பலா, வாழை போன்ற எல்லாப் பழங்களும் கிடைக்கும்**

**வினா :** பழக்கடையில் என்னென்ன பழங்கள் கிடைக்கும்?

**உப்பிட்டவரை உள்ளளவும் நினைக்க வேண்டும்**

**வினா :** யாரை உள்ளளவும் நினைக்க வேண்டும்?

**பிசிராந்தையார் அன்னச் சேவலைக் கோப்பெருஞ்சோழனிடம் தூதாய் அனுப்பினார்**

**வினா :** பிசிராந்தையார் எதைக் கோப்பெருஞ்சோழனிடம் தூதாய் அனுப்பினார்?

This document was created with the Win2PDF “Print to PDF” printer available at

https://www.win2pdf.com

This version of Win2PDF 10 is for evaluation and non-commercial use only.
Visit https://www.win2pdf.com/trial/ for a 30 day trial license.

This page will not be added after purchasing Win2PDF.

https://www.win2pdf.com/purchase/